# கோட்டிகோஸ்டெரொய்டு பூச்சு மருந்துகள்
# (Topical Corticosteroids)

1. **கோட்டிகோஸ்டெரொய்டு பூச்சு மருந்துகள் என்றால் என்ன? அவை எவ்வாறு தொழில்படுகின்றன?**

Steroids என்பது எமது உடலில் இயற்கையாக உருவாக்கப்படும் ஒருவகையான இரசாயனப் பதார்த்தம் ஆகும். இவற்றில் பல வகை உண்டு. தோல்நோய்களைக் குணப்படுத்துவதற்கு பாவிக்கப்படும் steroid கள் பொதுவாக கோட்டிகோஸ்டெரொய்டு வகையைச் சேர்ந்தவை. கோட்டிகோஸ்டெரொய்டுகள் தோலில் அழற்சியைக் (inflamation) குறைப்பதால் தோல் நோய்களை குணமாக்க பாவிக்கப்படுகின்றன.

2. **இந்த மருந்து எவ்வடிவங்களில் காணப்படுகின்றன?**

மேற்பூச்சு மருந்து (Topical Application)

குளிசை (Tablets)

ஊசிமருந்து (Injection)

3. **எந்த தோல் நோய்களைக் குணப்படுத்த கோர்டிகோஸ்டெரொய்ட் பூச்சு மருந்துகள் பாவிக்கப்படுகின்றன?**

தோல் அழற்சி (Eczema)

வெண்குஷ்டம் (Vitiligo)

சொராயசிஸ் (Psoriasis)

தோல் வைத்திய நிபுணரால் சிபாரிசு செய்யப்படும் வேறு தோல் நோய்கள்.

4. **மேற்பூச்சு கோட்டிகொஸ்டெரொய்டு மருந்துகளைப் பாவிக்கும்போது கவனிக்க வேண்டியவை.**

- உங்களது வைத்தியரது ஆலோசனைப்படி குறித்த வீரியமுள்ள மருந்தை குறித்த பகுதிக்கு பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்கு மட்டும் பாவிக்க வேண்டும்.
- வழமையாக ஒரு நாளைக்கு ஒரு முறை அல்லது இரு முறை பாவிக்கப்படும்.
- மெல்லிய படையாகப் பூச வேண்டும்.
- உரோமம் வளரும் திசையில் பூச வேண்டும்.
  உ- ம் : கை, கால்களில் மேலிருந்து கீழ்நோக்கிப் பூசவும்.
- வெவ்வேறு வகையான பூச்சு மருந்துகள் பரிந்துரை செய்யப்படும் போது எந்த மருந்தை எந்த பகுதிக்கு பூசுவது என சரியாகத் தெரிந்து கொள்ளவும்.

## 5. கோட்டிகோஸ்டெரோய்டு பூச்சு மருந்துகளால் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் யாவை?

சரியான முறையில் பூச்சு மருந்துகளைப் பாவித்தால் பக்கவிளைவுகள் ஏற்படும் சந்தர்ப்பம் மிகவும் அரிது. ஆனால் நீண்ட காலத்திற்கு குறிப்பாக மிகவும் வீரியமான பூச்சு மருந்துகளைப் பாவிக்கும்போது தோலில் பின்வரும் பக்கவிளைவுகள் ஏற்படலாம்.

- தோல் மெல்லியதாதல் (Thinning)
- நிறம் வெள்ளையாதல் (Hypopigmentation)
- உரோமம் வளர்தல் (Hypertrichosis)
- வரிதழும்புகள் ஏற்படுதல் (Stretch marks)
- பருக்கள் ஏற்படல் (Pimples / Folliculitis)
- கிருமித் தொற்று (Infection)

குளிசை வடிவிலான கோட்டிகோஸ்டெரொய்டுகளை நீண்ட காலத்திற்கு பாவிக்கும்போது பின்வரும் பக்கவிளைவுகள் ஏற்படலாம்.

- உடல் பருமனடைதல் (Obesity)
- கண்புரை (Cataract)
- பருக்கள் (Acne /Pimples)
- எலும்புப்புரை (Osteoporosis)
- உயர்குருதியழுத்தம் (Hypertension)
- நீரிழிவு நோய் (Diabetes Mellitus)
- மனஅழுத்தம் (Depression)
- தசைபலவீனம் (Musle weakness)
- கிருமித்தொற்று (Infection)

## 6. கோட்டிகோஸ்டெரொய்டுகளை பூச்சு மருந்துகள் பாவிக்கக்கூடாத சந்தர்ப்பங்கள்

- தோலில் கிருமித் தொற்று
- சில தோல் நோய்கள்

உ-ம் : முகப்பரு (Acne), றொசேசியா (Rosacea)

## 7. கோட்டிகோஸ்டெரொய்டு மருந்துகளைப் பாவிக்கும்போது கவனத்திற் கொள்ளவேண்டியவை.

- பூச்சுமருந்து, குளிசைகளைப் பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்கு மட்டும் பாவிக்க வேண்டும். வைத்தியரின் பரிந்துரையின்றி இவற்றை மருந்தகத்தில் இருந்து வாங்கக் கூடாது.
- நீண்ட காலத்திற்கு குளிசைகளைப் பாவித்த பின்னர் உடனடியாக பாவனையை நிறுத்தக் கூடாது.
- உடனடியாக நிறுத்தினால, பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்.
- வைத்திய ஆலோசனைக்கமைய படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டும்.